
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. நாகமான் 1

2. கர்த்தருடைய பணியைப் பற்றியை சிந்தனையில் 8

3. இயேசுவின் பிரயாணத்தில் 11

4. சத்திய சபைக்குச் செல்வோம் 14

5. யெரொபெயாம் 24

6. அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை 27

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 | MARCH 1994 | Issue-3

## ஆசிரியவுரை

## "நாகமான்"

இரண்டு இராஜாக்கள் ஐந்தாம் அதிகாரத்தில், படைத் தளபதியாக இருந்த நாகமானைப் பற்றி நாம் காணலாம். கிறிஸ்துவுக்கு முன் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தீர்க்கதரிசியாகிய எலிசாவின் நாட்களில், இவன் வாழ்ந்துள்ளான். அக்கால கட்டத்தில், ஓரளவிற்குப் பிரபலமாயிருந்த சீரியா இராஜாவுக்கு, வெற்றிகளைக் கொண்டு வரும் படையின் தளபதியாக இருந்துள்ளான். வேதாகமமே இவனைப் பராக்கிரமசாலி என்று வர்ணிக்கிறது. தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும், எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்த இவனுக்கு வாழ்க்கையில் ஒரு குறைவும் இருந்திருக்காது என்று தான் நினைக்கத் தோன்றும். (2 இராஜா. 5:1)

ஆனால், அந்தப் பெரிய மனிதனோ குஷ்டரோகியாயிருந்தான். பெரும் பதவி இருந்தது, மிகுந்த செல்வாக்கு இருந்தது, மாளிகை இருந்தது, பொருள் இருந்தது, வேலைக்காரர் இருந்தனர், நினைப்பதெல்லாம் நடந்தது, கேட்டதெல்லாம் கிடைத்தது. மொத்தத்தில் எல்லாம் இருந்தது, ஒன்றைத் தவிர. ஆம், உண்மையான சந்தோஷம் அவன் வாழ்க்கையில் இருந்திருக்க எந்த நியாயமும் இல்லை. ஏனெனில் மருத்துவ விஞ்ஞானத்தில் அரிய சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் இந்நாட்களிலேயே கூட, முற்றிலும் குணமாக்கப்படமுடியாத, "குஷ்டம்" என்ற கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தான்.

அப்படியானால் அந்நாட்களில், குணம்பெற வழியே இல்லை என்ற நிலை இருந்தபொழுது, அவனுடைய வேதனை எவ்வளவாய் இருந்திருக்கும்? "நாகமான்" என்ற பெயரின் பொருள் "இன்பம்". பாவம், இன்பம் அவன் பெயரில் தான் இருந்ததேயொழிய, வாழ்க்கையில் இல்லை.

பழைய ஏற்பாட்டில் புகழ்மிக்க இராஜாவாக இருந்த சாலமோனின் மரணத்திற்குப் பிறகு, ஒன்றுபட்டிருந்த இஸ்ரவேல் இராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிளவுபட்டுப்போன பிறகு, இச்சம்பவம் நடந்திருக்க வேண்டும். குறிப்பாக, சீரியாவுக்கும், இஸ்ரவேலுக்கும் யுத்தம் நடந்தது, "போர் ஓய்வு" தற்காலிகமாக அமலில் இருந்த சமயத்தில் இது நடந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சரி, உயர்ந்தபதவி, மிக்க செல்வாக்கு, வசதி வாய்ப்பு என எல்லாமே இருந்தபடியால், தன்னுடைய வியாதியிலிருந்து விடுபட அவன் மிகப்பெரும் முயற்சிகள் எடுத்திருப்பான். பார்க்காத மருத்துவர்களோ, செய்யாத வைத்தியமோ இருந்திருக்காது. ஆனால் அனைத்தும் விழலுக்கிரைத்த நீராகப் போய்க்கொண்டிருந்தது. வாழ்க்கையில் வெறுப்புற்று, விரக்தியின் உச்ச கட்டத்தில் இருந்தபொழுதுதான், இஸ்ரவேலிலிருந்து சிறைபிடித்துக் கொண்டுவரப்பட்ட அடிமைப் பெண்ணின் ஆலோசனை கிடைத்தது. ஆம், நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டு வந்த, கெட்டிக்காரச் சிறுமி, தன் ஆண்டவனின் வியாதி நீங்க வழி சொல்கிறாள். (வசனம் :3)

எப்படியாவது குணம் பெற வேண்டுமெனத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த நாகமான், தன்னுடைய சீரியா இராஜாவின் சிபாரிசைத் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் இருந்த இஸ்ரவேல் இராஜாவுக்குக் கடிதம் வாங்கிக் கொண்டு, (வசனம் : 5) தன் செல்வாக்கிற்குத் தகுந்த வெகுமதிகளை நிரம்ப எடுத்துக் கொண்டு, நிறைந்த கனவுகளை நெஞ்சில் சுமந்து செல்கிறான்.

கடிதத்தை வாங்கி வாசித்த இஸ்ரவேலின் ராஜா, வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு நிற்கிறான். (வ. 7) இஸ்ரவேலின் இராஜா, கலங்கி நிற்பதை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்று நாகமான் அறிந்து கொள்ளட்டுமென்று இராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். (வசனம் : 8) செய்தி கேட்ட நாகமான், தன் பரிவாரங்களுடன் ஓடோடி வந்து, வாசற்படியிலே நின்றான். (வ. 9)

தீர்க்கதரிசியாகிய எலிசா வெளியே வந்து, தன்னை வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வான் என்று காத்திருந்த நாகமானின்

எண்ணத்தில் இடி விழுந்தது. எலிசாவின் வேலைக்காரன் வெளியே வந்து, "**நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் . . .**" என்று எலிசா சொன்னதாகச் சொன்னான். (வ. 10)

தான் முற்றிலும் அவமதிக்கப்பட்டதாக எண்ணின நாகமான். கடுங்கோபமுற்று, தான் நினைத்து வந்ததற்கு மாறாக எல்லாம் நடந்ததால், சுகம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, வீடு திரும்பலாம் என்று முடிவெடுத்துத் திரும்பின வேளையில், தன்னுடைய வேலைக்காரரின் தலையீட்டால், அவனால் மிகவும் அற்பமாக எண்ணப்பட்ட **யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கி பூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டான்.** அத்தோடு நில்லாமல் திரும்பவும் எலிசாவினிடம் வந்து, அவனுக்கு முன்பாக நின்று, "**. . . . . இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லையென்பதை அறிந்தேன். . . .**" **என்று சாட்சி பகர்ந்தும் செல்கிறான். (2 இராஜா 5:11-15).**

சரி, மேற்கண்ட சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் சில உண்டு. கவனிப்போம்.

### 1. நாகமான் தேவையிலிருந்தான் (வசனம். 1)

வாழ்க்கையின் சகல வசதிகளையும் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியம் இருந்தும் கூட, அவனுக்குள் சந்தோஷமில்லை. ஒருவராலும் குணப்படுத்த முடியாத கொடிய வியாதியில் சிக்கிக் கொண்டிருந்தான். ஆம், "**சரீர சுகம்**" என்ற மிகப் பெரிய தேவை அவனுக்கிருந்தது.

நாகமானைப் போலவே நாமும் ஒரு பெரிய தேவையில் உள்ளோம். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வில், தன் நிலைக்கேற்ப, தேவையான எல்லாவற்றையும் பெற்று அனுபவித்தாலும் அவனுக்குள் சந்தோஷமில்லை. அநேகருடைய வாழ்க்கை, நாகமானின் வாழ்க்கையைப் போல வெளியில் பார்ப்பதற்கு மகிழ்ச்சி பொங்கும் வாழ்க்கையைப் போலத் தோன்றினாலும், உள்ளூர சந்தோஷமில்லை.

ஏனெனில், "பாவம்" என்ற கோரப்பிடியில் சிக்கி மனிதன் சீரழிந்து கொண்டுள்ளான். பாவம் இல்லாத மனிதனே கிடையாது என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. பவுல் ரோமாபுரியாருக்குச் சொல்லும் பொழுது, "**எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி . . . .**" (ரோம. 3:23) என்று சொல்கிறார். மீண்டும் அதே நிருபத்தில், "**இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும், உலகத்திலே பிரவேசித்தது போலவும் . . . .**" என்று சொல்கிறார். (ரோம. 5:12) மேற்சொன்ன வசனங்கள் பாவம் இல்லாத

மனிதனே கிடையாது என்பதை உறுதி செய்கிறது. **பாவம் குஷ்டரோகத்தை விடக் கொடிய ஒன்று.** குஷ்டத்தால் மனிதனின் சரீரத்தை மட்டுமே அழிக்க முடியும். ஆனால் பாவத்தால் ஆன்மாவையே அழிக்க முடியும். ஒருவனை நித்திய நரகத்தில்கொண்டு போய்ச் சேர்க்கும் சக்தி படைத்தது, பாவம்.

ஆக, நாகமான் "**சரீர சுகம்**" என்ற தேவையில் இருந்ததைப்போல, நாம் "**ஆத்தும சுகம்**" என்ற பெரும் தேவையில் உள்ளோம்.

## 2. நாகமான் வழி தப்பிப் போனான் (வசனம் : 12)

தன்னுடைய் கொடிய வியாதியிலிருந்து விடுபட வேண்டுமென்று அவன் முயற்சித்த வேளையில், அவனுக்கு சரியான வழிகாட்டப்பட்டது. காட்டப்பட்ட வழியில் அவன் முனைந்து சென்றாலும், முக்கியமான கட்டத்தில் வழி தவறுகிறான்.

ஆம், அருகிலிருந்த யோர்தானில் முழுகச் சொன்னதை அவன் மிகப் பெரிய கேவலமாக நினைக்கிறான். தன்னுடைய தேசத்து நதிகளாகிய ஆப்னா, பர்பார் இவைகளைக் காட்டிலும், இந்த யோர்தான் என்ன சிறப்பு வாய்ந்ததோ என்று பெருமைபேசி, பாதை மாறுகிறான்!

இத்தனைக்கும் அவன் செய்யும்படியாகச் சொல்லப்பட்ட காரியம் எளிமையான ஒன்று. யோர்தானில் ஏழுதரம் முழுக வேண்டும், அவ்வளவே. அதற்கு விலையும் இல்லை, பணமும் இல்லை. முற்றிலும் இலவசம். ஆனால் பெருமை, கௌரவம் குறுக்கே வருகிறது. அவனைப் போலவே உலக மக்களாகிய நாம், குறிப்பாக கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளும் நாம், "ஆத்தும சுகம்" பெற்றுக் கொள்ளும் விஷயத்தில் வழிதப்பிப்போகிறோம். பின்வரும் வசனங்கள் அதைத் தான் நமக்குச் சொல்கிறது. "எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. (ரோமர். 3:12)"நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம். . . ." (ஏசா 53:6).

நாமும் கூட; ஆத்தும சுகம் பெற்றுக்கொள்ள வேண்டும். இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை சொன்னால் ஆவலோடு கேட்கிறோம். ஆனால், இப்படிச் செய்ய வேண்டுமென்று வேதவசனங்களைக் கொண்டு, எளிய வழிகளை எடுத்துச் சொன்னால், தயக்கம் எங்கிருந்தோ தாவி வருகிறது. நாகமானைப் போல பெருமை பேசுவதையும் நாம் விட்டு வைப்பதில்லை. குலப்பெருமை, தாங்கள் சார்ந்துள்ள சபைப் பெருமை, அந்தச் சபையின் கட்டிடப் பெருமை, அங்கு வருவோரின் எண்ணிக்கைப்

பெருமை, அங்கு கிடைக்கும் பதவிப் பெருமை, தங்கள் பாரம்பரியப் பெருமை, தங்கள் குடும்பத்தின் பக்திப் பெருமை, என்று பேசி, "நரகமே சென்றாலும் சரி" உண்மையான சத்தியத்திற்குக் கீழ்ப்படியமாட்டோம் (யோவா. 8:32) இயேசுக்கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து சம்பாதித்த சபையை (அப் 20:28) கண்டு கொள்ளமாட்டோம் என்று பிடிவாதமாக இருக்கின்றோம்.

ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாதை மாறின நாகமான், அந்நிலையில் திரும்பிப் போயிருந்தால் நஷ்டம் அவனுக்குத்தான். நிச்சயமாக எலிசாவுக்கு அல்ல.

### 3. நாகமான் கோபப்பட்டான் (வசனம் : 11)

தன்னுடைய பதவிக்கும், செல்வாக்கிற்கும் உகந்த மரியாதை தீர்க்கதரிசியாகிய எலிசாவினிடத்திலிருந்து கிடைக்குமென்று நம்பிக் கையோடு எதிர்பார்த்து வந்தான். கிடைக்காமல் போகவே அவனுக்கு கோபம் கொப்பளித்து வருகிறது. தேவனுக்கும், தேவனுடைய உண்மை ஊழியனுக்கும் "**அனைவரும் சமம்**" என்ற உண்மை ஏனோ நாகமானுக்குத் தெரியவில்லை. ஒருவன் வகிக்கும் பதவிக்கும், கொடுக்கும் காணிக்கைக்கும் தகுந்தாற்போல் மரியாதை கொடுக்க எலிசா என்ன 20ம் நூற்றாண்டு ஊழியரா?

மேலும், எலிசாவை சந்திக்க வரும் பொழுதே, எதிர்பார்ப்போடு வந்துள்ளான் நாகமான். ஒரு காரியத்தை அணுகு முன்பே, எந்தவொரு தீர்மானமும் எடுக்கக் கூடாது என்பது, ஏன் அந்த படைத் தளபதிக்கு விளங்கவில்லை? எப்பொழுதும், "**வெற்றியே குறி**" என்ற இலக்கோடு இருந்ததாலோ? அவனுடைய கோபத்தில் நியாயமோ, விவேகமோ இல்லை.

இன்றைக்கும் கூட, அநேகரிடத்தில் உண்மையைப் பேசினால் கோபம் வருகிறது. இதுதான் சத்தியம், வசனம் இப்படித்தான் சொல்கிறது, இந்தக் குறிப்பிட்ட வசனத்தில் பொருள் இதுதான், இந்தப் பகுதி இன்ன நோக்கத்தோடு தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னால் கோபப்படுகிறார்கள். அப்படியானால் எங்கள் போதகருக்கு ஒன்றும் தெரியாதா? அங்கே வருகிறவர்களெல்லாம் முட்டாள்களா? உங்களுக்குத்தான் எல்லாம் தெரியுமா? என அப்படி, இப்படி என்று விளாசித் தள்ளுகிறார்கள். நண்பரே, கோபம் வேண்டாம். சிந்திப்போம்.

அதுமாத்திரமல்ல, 11ம் வசனத்தின் கடைசிப் பகுதி, ". . . . . **எனக்குள் நினைத்திருந்தேன்**" என்று நாகமான் சொன்னதாகச்

சொல்கிறது. எதை வேண்டுமானாலும் நினைக்க நாகமானுக்கு உரிமை உண்டு. ஆனால், "**அவனுடைய நினைப்பை**" நிறைவேற்ற எலிசா அங்கு இல்லை. தேவனுடைய வார்த்தையை, தேவன் சொல்வதை நிறைவேற்றுவது தான் எலிசாவின் வேலை. நம்முடைய நினைவுகள் தேவனுடைய பார்வையில் ஒரு பொருட்டல்ல. ஏனெனில் "**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளுமல்ல வென்று கர்த்தர் சொல்கிறார்.** (ஏசா : 55:8)

பெரும்பாலானவர்களுக்கு தங்களுடைய நினைப்பு தான் பெரிது. நாம் நியாயத்தீர்ப்பின் நாளிலே போய், "**நான் நினைத்தேன்**" என்று நாகமானைப் போல சொல்வோமானால், நம்முடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கும். "..... **நான் சொல்லிய வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று நமதாண்டவர் சொல்கிறார்.** (யோவா. 12 : 48) நான் நினைத்தேன் இதுதான் மெய்யான சத்தியம் என்று, நான் நினைத்தேன் ஞானஸ்நானம் இப்படித்தான் என்று, நான் நினைத்தேன் இரட்சிப்புக்கு இவைகள் போதுமென்று, நான் நினைத்தேன்'பரலோகம் செல்ல' இவைகள் முக்கியமல்ல என்றெல்லாம் சொல்வோமானால் புறம்பே தள்ளப்படுவோம்!

## 4. இறுதியாக நாகமான் செயல்பட்டான் (2 இராஜா 5:14)

நாகமான் திரும்பிப் போகும் பொழுது, அவனுடைய ஊழியக் காரர் சமீபத்தில் வந்து, "**தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோட சொல்லும் போது அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்**" (வ. 13) உண்மையுள்ள ஊழியர்கள். நாகமான் எப்படியாவது குணம் பெற வேண்டுமென்ற, அவனுடைய வேலைக்காரர் விருப்பம் பளிச்செனத் தெரிகிறது.

சரி, தன்னுடைய ஊழியரின் களங்கமற்ற அக்கரையைப் புரிந்து கொண்ட நாகமான் செயலில் இறங்கினான். ஆம், தேவனுடைய மனுஷனின் வார்த்தையை அற்பமாக எண்ணின நாகமான், தீர்க்கதரிசியின் அனுகுமுறையினிமித்தம் எரிச்சலும், கோபமும் அடைந்த நாகமான், இப்பொழுது யோர்தானில் ஏழுதரம் முழுகினான். என்னே அற்புதம்! "**அவனுடைய மாம்சம் சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி சுத்தமானான்**". (வ. 14)

எப்படி சுகம் கிடைத்தது? யோர்தானின் தண்ணீருக்கு ஏதாவது சக்தி இருந்ததா? பைத்தியத்திற்கு ஒரு குற்றாலம் அருவிபோல, குஷ்டத்

திற்கு யோர்தான் நதியா? பின்னே எப்படிக் குணம் கிடைத்தது? எப்படி சிறு பிள்ளையின் மாம்சம் போல மாறிற்று?

தண்ணீரில் சக்தி ஒன்றுமில்லை. **ஆனால் கீழ்ப்படிதலில் எல்லாம் உள்ளது.** தேவன் தன்னுடைய வார்த்தைக்கு, பரிசுத்த ஆவியானவரின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வேத வசனத்திற்கு நாம் முற்றிலும் கீழ்ப் படிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். 1 சாமுவேல் 15 : 22ல் அதை நாம் தெளிவாகக் காண முடியும்". "**அதற்கு சாமுவேல் . . . . பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்**" என்கிறார்.

பாவங்கள் கழுவப்பட்ட, திருமுழுக்குப் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று சொல்லும் போது, ஞானஸ்நானத்தில் என்ன இருக்கிறது என்று சொல்வோரே, கவனிப்போம். தண்ணீரில் ஒன்றுமில்லையென்பது உண்மை தான். ஆனால், தேவன் அதைச் செய்யச் சொல்லும்பொழுது, கீழ்ப்படிந்தே ஆக வேண்டும். கீழ்ப்படிய மறுப்போமானால் பாவக் குஷ்டம் நம்மைவிட்டு நீங்காது. நீங்கவே நீங்காது. ஞானஸ்நானத்திற்கு முன் செய்ய வேண்டிய காரியங்கள் சில உண்டு. விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 16:16) மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38) அறிக் கையிட வேண்டும். (ரோம. 10:10) பிறகு திருமுழுக்கு பெற்றுக் கொள்ள வேண்டும் (அப். 2:38)

இப்படிச் செய்வோமானால் நாம் "**ஆத்தும சுகம்**" பெற்றுக் கொள்ள முடியும். நித்தியத்தை பரலோகத்தில் கழிக்க முடியும்.

E.Z.S. ராஜநாயகம்.

## பிலிப்பியர்: 4 : 4 :

**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள். சந்தோஷமாய் இருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.**

**- பவுலடியார்**

# கர்த்தருடைய பணியைப் பற்றியை சிந்தனையில்!

நான் பல ஆண்டுகளாகக் கர்த்தருடைய பணியைச் செய்யும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். உலகத்தின் பல பாகங்களில் அவருடைய செய்தி பரவுவதைக் கண்டிருக்கிறேன். இந்த மாபெரும் நாட்டிலும் கூட சத்தியம் பரவி வருவதற்கு என்னுடைய சிறு பங்கு உண்டு.

அவருடைய பணிகளைப் பற்றி எனக்கு இருக்கும் ஆசைகளும் நம்பிக்கையும் ஏராளம். அந்த கனவுகளும் ஆசைகளும் வீண் போகவில்லை. ஓரளவுக்கு நிறைவேறிக் கொண்டிருப்பதைக் கண்டு பூரிப்படைகிறேன். இன்னும் கூட சிறப்பாக நடைபெற்று என் வாழ்நாள் காலத்திலேயே என்னுடைய ஆசைகளும் கனவுகளும் முழுவதும் இல்லா விட்டாலும் பெரும்பகுதி நிறைவேறாதா என்று நான் ஏங்குவதுண்டு. உங்களுக்கும் கூட அப்படிப்பட்ட ஆசைகள் இருக்கலாம். என்னுடைய ஆசைகள் கனவுகள் சிலவற்றை கீழே பட்டியல் போட்டுக்காட்டியிருக் கிறேன். அவைகளை நாம் அடைய வேண்டிய இலக்கு என்று கூடக் குறிப்பிடலாம்.

1. கிறிஸ்துவின் நற்செய்தி தொடர்ந்து இந்த மாபெரும் நாட்டில் பிரசங்கிக்கப்பட்டு, இந்த மண்ணின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவ வேண்டும்.

2. இங்கு மட்டுமல்ல, அண்டை நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

3. பல பிரசங்கிமார்கள் எழும்பி, தங்கள் சொந்தக் கால்களில் நின்று நற்செய்திகளை நாடெங்கிலும் பரப்பி புதிய ஏற்பாட்டுச் சபைகளை பட்டி தொட்டிகளிலெல்லாம் நிறுவ வேண்டும்.

4. ஒவ்வொரு பிராந்திய சபையின் உறுப்பினர்களும் கொடுக்கிற தினால் உண்டாகும் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் புரிந்து கொண்டு, உற்சாகமாய்க் கொடுத்து தங்களுடைய ஊழியர்களையும் தங்கள் சபைகளின் தேவைகளையும் தாங்களே தாங்கிக் கொள்ளவும் நற் செய்தி பரவாத இடங்களுக்கு ஆள் உதவி செய்யவும் வேண்டும்.

5. 1 தீமோ 3-ம் அதிகாரம், தீத்து முதலாம் அதிகாரம் ஆகியவை களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளையுடைய மூப்பர்களும், உதவிக் காரர்களும் உருவாக்கப்பட வேண்டும்.

6. அனைத்து பிரசிங்கிமார்களும் பிராந்திய சபைகளும் ஒன்று பட்டு நற்செய்தியை பட்டித் தொட்டிகளுக்கெல்லாம் எடுத்துச் செல்ல இணைந்து செயல்பட வேண்டும்.

7. இந்நாட்டிலுள்ள சபைகள் வேறு நாட்டவரின் கைகளை எதிர் பார்த்துக் கொண்டிராமல் தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொண்டு சபையின் சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டு சபையின் தன்னாட்சித் தன்மையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

8. இந்நாட்டின் இளைஞர்களுக்கு வேதாகம அறிவும், இதரக்கல்வி சம்மந்தப்பட்ட காரியங்களையும் தாங்களே பார்த்துக் கொள்ளக் கூடிய அளவு பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவுகிற அளவுக்கு பொருளாதாரத்திலும் எண்ணிக்கையிலும் வளர வேண்டும்.

9. நற்செய்தியைப் பரப்பும் மாத இதழ்கள், சிற்றறிக்கைகள் போன்றவற்றைத் தாங்களே எழுதக் கூடிய எழுத்தாளர்கள் உருவாக வேண்டும்.

10. அங்கொன்று இங்கொன்று என்று இல்லாமல் அனைத்துப் பிராந்திய சபைகளும் வேதாகமத்தை தன்னுடைய அங்கத்தினர்களுக்கு முறையாகக் கற்றுக் கொடுக்கத் திட்டமிட்டு, அதில் அனைத்து அங்கத்தி னர்களும் கலந்து கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

11. சபையில் உள்ள பெண்கள் தாங்களாகவே பெண்களுக்கான வகுப்புகளை நடத்தவும், ஞாயிறு பள்ளிகள் நடத்தவும், பெண்கள் மத்தியிலே பிரசங்கிக்க கூடிய அளவுக்கு தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

ஆம், நான் தொடர்ந்து கனவுகள் கண்டு கொண்டேயிருக்கிறேன். இன்னும் அந்நிலையில் தொடர்வேன். சபைகள் எண்ணிக்கையிலும் ஆவியிலும் வளரவேண்டும். சகோதரர்கள் தங்களுடைய சபை வளர்ச் சிக்கான திட்டங்களைத் தீட்டி அவைகளை நிறைவேற்ற உழைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் எப்போதுமே 'ஐயோ, அது முடியாது, ஐயோ இது கூடாது' என்று கூறி பிரச்சினைகளைச் சந்திக்கவே பயப்படுகிறோம். நம்முடைய விசுவாசம் எங்கே? கர்த்த ருடைய கரம் நம்மோடு கூட இருக்கும் போது எது தான் முடியாது? நாம் நம்முடைய கண்களைத் திறந்து தேவைகளைக் காண முடிந்தால் நாம் செயல்படுவோம். கர்த்தர் அவைகளை விளையச் செய்வார்.

நாம் பலவீனர், நாம் குறைவானவர்கள், நாம் வறுமையில் வாடுப வர்கள் என்று நினைத்துக் கொள்ளும் தாழ்வு மனப்பான்மையை நம் நெஞ்சை விட்டு அகற்றி விட வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்

கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் நம்முடைய தேவைகளைச் சந்திக்க நாம் திட்டமிடுகிறோம். அந்த திட்டங்களை நிறைவேற்ற எங்கே கடன் வாங்கலாம், யாருடைய சிபாரிசைத் தேடலாம் என்று சதா சிந்திக்கிறோம். குழந்தைகளின் கல்வி வசதிக்காகவும், அலுவலகங்களுக்கும், பணி மனைகளுக்கும் செல்வதற்கு வசதியாகவும் நம்முடைய வீடுகளை வாடகைக்கு அமர்த்தியோ, கிரயத்திற்கு வாங்கவோ முயற்சி செய்கிறோம். வெற்றியும் பெறுகிறோம். நம்முடைய தேவைகளை நாம் சந்திப்பதற்கு நமக்குத் திராணியிருக்குமானால், பல குடும்பங்கள் அடங்கிய சபையின் தேவைகளைச் சந்திப்பது ஏன் முடியாது? நம்முடைய ஆள்பலத்தையும் கொடுக்கும் சக்திகளையும் அதிகப்படுத்தி சபையின் தேவைகளை ஏன் சந்திக்க முடியாது? கர்த்தருடைய காரியத்தில் நாம் முனைப்புடன் ஈடுபாடு கொள்ளும் போது நம்மை சிக்கலில் தவிக்க விட்டு விட்டு கர்த்தர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாரா? நிச்சயமாய் அவர் கைக்கொடுப்பார். இந்த விசுவாசத்தோடுதான் நம்முடைய வசதி வாய்ப்புக்களை முழுமையாய் பயன்படுத்தி கர்த்தருடைய ஒத்தாசைகளைப் பெற்று வெற்றிகளைக் குவித்து பீடு நடைபோடுவோம் என்று கனவு காண்கிறேன்.

உங்கள் கனவுகள் எப்படிப்பட்டது? அவைகளை நனவாக்க உங்களுடைய திட்டமென்ன? முதலாவது நான் கர்த்தருக்காக என்ன செய்கிறேன் என்று நம்மை நாமே முதலில் கேட்டுக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலன் பவுல் கூறியதை நினைத்துப் பாருங்கள். **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு** என்கிறார். (பிலி 4:13) அவருக்கு அப்படிப்பட்ட விசுவாசம் இருந்ததானால் அது ஏன் நமக்கும் இருக்கக் கூடாது? பின்னே ஏன் தாமதம்? நம்முடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்தியுங்கள். சிந்திப்பதோடு நில்லாமல் அதைச் செயல்படுத்த முற்படுங்கள். கர்த்தர் நம்மோடே இருந்து வெற்றி பெறச் செய்வார்.

**J.C. சோட்**

**தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான். ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே, தன் தகப்பனையும், தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோகும்.**

**தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார்.**

**வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம்,**
**முதிர் வயதானவர்களின் மகிமை அவர்கள் நரை.**

## பெண்கள் பகுதி

# இயேசுவின் பிரயாணத்தில்

பின்பு, அவர் பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிவரும் அவருடனேகூட இருந்தார்கள்.

அவர் பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள் (லூக். 8:1-3).

மத்தேயு 27:55ல், "மேலும், இயேசுவுக்கு ஊழியம் செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்" என்று நாம் வாசிக்க முடியும்.

இயேசுக் கிறிஸ்துவோடும், அவருடைய அப்போஸ்தலரோடும் பிரயாணம் செய்த அந்தக் குழுவில் ஒருவராக இருப்பது ஆச்சரியமும், பரவசமூட்டும் அனுபவம் இல்லையா? இன்றைய நிலையிலிருந்து நாம் கவனித்தால், அந்தப் பெண்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று எண்ணுகிறோம்! அவர்கள் உண்மையாகவே இயேசுவோடு - தேவனுடைய ஒரே பேறான குமாரனோடு ஒவ்வொரு நாளும் கூட்டாளிகளாயிருந்தார்கள். அவருடைய பல அற்புதங்களை அவர்கள் கண்ணாரக் கண்டார்கள். சத்தியமும், ஞானமும் நிறைந்து, தேவனிடத்திலிருந்து வந்த அவருடைய போதனைகளைக் கேட்டார்கள். அந்த உன்னதமானவருக்கு சேவை செய்யும் சிலாக்கியத்தைப் பெற்றார்கள்.

அவர்கள் என்ன செய்தார்கள்? எங்ஙனம் நம தாண்டவருக்கு அந்தப் பெண்கள் சேவை செய்தார்கள்? பெண்களாகிய நாம் அந்தக் குழுவில் இடம் பெறும் வாய்ப்பு கிடைத்திருந்தால், நாம் அவருக்கு என்ன சேவை செய்திருப்போம்?

லூக்க 8:3ல் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு சேவை என்னவெனில் ". . . . . தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம்

செய்து கொண்டு வந்தார்கள்'' என்பது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரிடம் இவ்விதமாகச் சொல்கிறார். "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை'' என்று (லூக் 9:58).

எல்லாவற்றையும் படைத்த ஒருவர், பரலோகத்தின் மகிமைகளைத் துறந்து மனிதனாக வாழ பூமிக்கு வந்தார். இங்கே அவருக்குச் சொந்தமாக என்ன இருந்தது? ஒன்றுமேயில்லை!

இருப்பினும், எண்ணிறைந்த சீடர்களோடும், 12 அப்போஸ்தலரோடும் அவர் பயணம் செய்தபடியால், அந்தக் கூட்டத்தின் சரீரத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது. அவர்களுடைய சரீரத்திற்கு உணவு, உடை, இருப்பிடம் போன்ற தேவைகள் இருந்தது. ஆக, உலகச் செல்வத்தால் ஓரளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டு, அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த பெண்கள், போதகர் மற்றும் அவருடைய சீடர்களின் சரீரத் தேவைகளைச் சந்திக்க பண உதவி செய்தார்கள்.

18 பேர் அல்லது 20 பேர் அல்லது அதற்கு மேலும் அடங்கிய ஒரு பெரிய குழுவுக்கு, அனுதின ஆகாரம் சமைப்பது, குழுவில் இருந்த பெண்கள் யாராவது ஒருவருக்கு அவசியமானதாக இருந்திருக்கும். இது ஒரு சாதாரண வேலையல்ல. வேறொருவர் உணவு சமைக்கும் பாத்திரங்கள், பரிமாறத் தேவைப்படும் பாத்திரங்கள் மற்றும் தட்டுகள், தம்ளர்கள் போன்ற அனைத்தையும் கழுவி சுத்தம் செய்திருக்க வேண்டும். இன்னுமொருவரால் ஆடைகள் எல்லாம் துவைக்கப்பட்டு, கிழிசல்கள் எல்லாம் சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். மொத்தத்தில் இயேசுவோடு பயணம் செய்த ஸ்திரீகள் சும்மா இருந்திருக்க வாய்ப்பில்லை.

இயேசுக்கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்திருந்து, அவரோடு கூட பிரயாணத்தில் பங்கு கொள்ளுமளவுக்கு குடும்பப் பொறுப்புகளிலிருந்து விடுபட்டிருந்தால், உண்மையாகவே, அவரோடுகூட சாலை ஓரங்களில் நடந்து திரிந்து அவருக்குச் சேவை செய்யும் கடினமான வாழ்வை நான் தெரிந்தெடுத்திருப்பேனா?

ஒருவேளை மத்தேயு 25:40 வசனத்தைக் கொண்டு இந்தக் கேள்விக்கு பதிலளிக்கலாம். இவ்வசனத்தில் மற்றவர்களுக்கு செய்யும் சேவையைக் குறித்து இயேசுக் கிறிஸ்து இவ்வாறாகச் சொல்கிறார். ". . . . **மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்''.**

இன்று நாம் பிறருக்கு உதவி செய்யத் தயாராய் உள்ளோமா? உடுத்த உடையில்லாத ஒருவனுக்கு, ஆடைகளைநாம் கொடுக்கும்

போது, நமக்கு இனி ஒரு போதும் பிரயோஜனப்படாத கிழிந்த வைகளை, கந்தைகளைக் கொடுக்கிறோமா? அப்படிக் கொடுக்கும் பொழுது, இயேசுக் கிறிஸ்து சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்'' அதை எனக்கே செய்தீர்கள். உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மாத்திரம் அல்ல, தலை சாய்க்க இடமில்லாமலிருக்கும் மற்றவர் களுக்கும் நம்முடைய வீடுகளைத் திறந்து இடம் கொடுக்கிறோமா? மறுபடியும் இயேசு சொன்னதை மறந்து விட வேண்டாம், "அதை எனக்கே செய்தீர்கள்".

"தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். . ." என்று மத். 26:11ல் இயேசுக் கிறிஸ்து சொன்னது உண்மை தான். கிறிஸ்தவன் தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் வறுமை ஒழிப்புக்கு செலவிட வேண்டுமென்று கிறிஸ்து சொல்லவில்லை. ஆனால் நம்முடைய வாழ்க்கையில், வெவ்வேறு சந்தர்ப்பங்களில், தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாமல், உண்மையாக பசியிலும், வறுமையிலும் வாடி, நம்முடைய இரக்கத்திற்காக காத்துக் கிடப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நம்மால் முடிந்தவரை உதவி செய்யக் கூடிய அளவுக்கு நாம் இரக்க குணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்படிப் பட்டதாக சந்தர்ப்பங்களை நாம் இயேசுவோடு பயணம் செய்து அவருக்கு ஆகாரம் தயாரித்து, அவருடைய துணிமணிகளை துவைத்துக் கொடுக்கும் சாலை ஓரப் பயணமாக எண்ண வேண்டும். "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத் : 25:40).

**BETTY CHOATE**
**RACHEL NAYAGAM**

"தேவையானது ஒன்றே மரியாள் தன்னை, விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்."

**- லூக் 10 : 42**

## நம்முடைய குடியிருப்பு

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

***பிலிப்பியர் 3 : 20***

# சத்திய சபைக்குச் செல்வோம்

"முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்கு
கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று"

- அப்போஸ்தலர் நடபடி 11:26

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சிறந்த வீட்டு பராமரிப்பு, என்ற அமெரிக்க நாட்டு பத்திரிக்கை "அமெரிக்காவில் மதம்" என்னும் தலைப்பில் 16 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. வித்தியாசமான வினோதமான, மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் உருவாகிய, சிறிதும் பெரிதுமான 1200 பிரிவுகள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக் கூறுவதாக அக்கட்டுரை தெரிவித்தது.

மாறுபாடான பல போதனைகளை இன்று கேட்டுவரும் மக்கள் எதை நம்புவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த சபை சரியானது, அல்லது எல்லா சபைகளுமே ஒன்று தானா? நான் எந்த சபையில் அங்கம் வகிக்க வேண்டும்? . . . என்ற வினாக்கள் எழுகின்றன. காளான்களைப் போல, பிரிவினை சபைகள் பெருகி பலுகி கிடக்கின்ற காரணத்தால் பலர் கிறிஸ்தவத்தையே வெறுத்து ஒதுங்கி விடுகின்றனர் அல்லது ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கிறிஸ்தவத்தின் வல்லமையும், உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு அதன் அவசியமும் இன்றைய பிரிவினை சபைகளின் தோற்றத்தால் கவலைக்கிடமான நிலையில் மறைந்து மங்கி வருகின்றன. இந்த பிரிவினைகளின் விலையோ மிக மிக அதிகம். பொறாமை, சந்தேகப் பார்வை, பிரிவுகளுக்கிடையே பரஸ்பர வெறுப்பு, இவற்றிற்கெல்லாம் மேலாக, பிரிவினை சபைகளின் குழப்பமான போதனைகள் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்துவின் அருகில் வரவிடாமல் ஓடவைத்துள்ளன.

இந்த நிலை, இதுவரை பலர் கேட்டிராத கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது. இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையில் மட்டுமே நாம் அங்கம் வகிக்க முடியாதா? அதாவது, பிரிவினை சபைகளின் பாரம் பரிய கொள்கைகளில் சிக்கித் தவிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டுமே பின்பற்றிச் செல்ல இயலாதா? பெயருக்கு மட்டும் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளுவது தேவையா? பிரிவினையற்ற கிறிஸ்தவம் அடைய முடியாத ஒன்றா அல்லது, கிறிஸ்துவின் ஒரே சபை நடைமுறைக்கு வராத கனவா? என்பவைகள் அவைகளில் சில.

மத உலகிலே இன்று நிலைத்துள்ள பிரிவினை சபைகளின் வரலாறுகளை, சிறிது பின் நோக்கி பார்க்க வேண்டிய தருணம் இதோ வந்துவிட்டது. இந்த சபைகள் எல்லாம் எங்கிருந்து, எப்பொழுது யாரால் ஏன் வந்தன? இவ்வளவு மோசமாக நாம் பிரிந்து கிடப்பது எப்படி? தேவனுக்கு இந்நிலை மகிழ்ச்சி தரக்கூடியதா? புற மதஸ்தர்கள் நம்மைப்

பற்றி என்ன நினைக்கிறார்கள்? கிறிஸ்துவை பின்பற்றுவோர் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே சபையாக இயங்க வழியே கிடையாதா? எல்லாவற்றிற்கும் மேலாக தொழுதிட, பிரிவினை லேபிள் எதுவும் இல்லாத "கிறிஸ்தவனாக" மட்டுமே இருப்பது எப்படி? இக்கேள்விகளுக் கெல்லாம் இங்கு விடை காணப் போகிறோம்.

புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது.

## புதிய ஏற்பாட்டு நிலை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 4;4-6 வசனங்களில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

'உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக் கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்' எல்லோ ருக்கு ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும் எல்லோரோடும் உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர்'.

ஒரே சரீரம் என பவுல் இங்கு குறிப்பிடுவது சபையை நினைவில் கொண்டு தான் என்பதை, அடுத்து எபேசியருக்கு எழுதிய நிருபம் 1;22-23 வசனங்களில் காணலாம் அதாவது:

"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி, எல்லா வற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான **சபைக்கு** அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்த ருளினார்". அந்த சரீரமாகிய ஒரே சபையில் அங்கத்தினர்கள் **கிறிஸ்த வர்கள்** என்று மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பதை அப்போஸ்தலர் நடபடி 11:26ம் வசனத்தில் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் விருப்பம், எல்லா மக்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதே. தன்னுடைய சபையைக் கட்டுவதாக அவர் கூறிய போது, ஒரே சபையைத் தான் கூறினார். மத்தேயு 16:18ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சபையை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப் பதைக் கவனியுங்கள். மேலும், இயேசு கிறிஸ்து சபையை தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்துக் கொண்டார் என அப்போஸ் தலர் நடபடி 20:28-ல் கூறப்பட்டுள்ளது. மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் என எபேசியர் 5:26, 27 வசனங்களில் காணலாம். பவுல் ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு எழுதுகிறபொழுது 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்' என ரோமர் 16:16ல் கூறியுள்ளார். எனவே கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார் அது கிறிஸ் துவின் சபை என தெளிவாக கூறப்பட்டுள்ளது.

அவருடைய சீடர்களின் ஒற்றுமைக்காகவும், அவருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கும்படியாகவும் இயேசு கெத்செமெனெ தோட்டத்தில் மனதுருகி ஜெபித்தார். யோவான் 17 : 20, 21ம் வசனங்களைப் பாருங்கள்: "அவர்களெல்லோரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" என ஜெபித்தார். எபேசியர் 2: 13-16 வசனங்களிலும் ஒரே சரீரமாகிய சபையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார்.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதிய எல்லோருமே பிரிவினையை கடுமையாக கண்டித்திருக்கின்றனர். 1 கொரிந்தியர் 1:10ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். "சகோதரர்களே நீங்களெல்லொரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்". கலாத்தியர் 5;20-வசனத்தில், பிரிவினையானது மாம்சத்தின் கிரியை என தேவனின் வார்த்தை கண்டிக்கிறது. 2 பேதுரு 2:1ம் வசனத்தில், கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்களை, தந்திரமாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளும் கள்ள தீர்க்கதரிசிகளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

1. புதிய ஏற்பாட்டின்படி, சபை ஒன்றே என்பது தெளிவாகத் தெரிவதால் எல்லா பிரிவினை சபைகளும் கண்டிக்கதக்கவை.

2. எல்லா 'சபைகளும் ஒன்றே' என்ற கூற்று தவறானது.

3. "விருப்பமான ஏதாவது ஒரு சபைக்குப் போகலாம்" என ஒருவர் சொல்வது, ஒன்று தவறான போதனையின் விளைவாக இருக்கலாம் அல்லது அவர் தேவனின் விருப்பத்தைப் பற்றி சிறிதும் கவலையற்ற நபராக இருக்கலாம்.

4. உண்மையான சபை ஒன்றே என்பது உறுதியானபின் மற்ற சபைப் பிரிவுகள் எல்லாம் போலிகள் என்பது சிந்திக்க விரும்புகிற ஒருவருக்கு விளங்காமற் போகாது.

5. புதிய ஏற்பாட்டு சபை ஒன்றே என்பதால் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரம் உள்ள எல்லோரும் அதில் தானே அங்கம் வகிக்க வேண்டும்?

எவ்வித விரோதமனப்பான்மையோ, அல்லது வெறுப்பு உணர்வோ இன்றி உங்கள் பேரில் அன்பும் அக்கறையும் கொண்டு

புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையைப் பற்றி நான் கூறுவதை தயவு செய்து வேதாகமத்துடன் ஒத்துப் பார்த்து சரியாக இருப்பின் ஏற்றுக் கொள்ளுங்கள். அப் 17:11, அது பிரிவினையற்ற கிறிஸ்துவை நடுநாயகராக கொண்ட தேவனின் அநாதித் தீர்மானங்களின் நிறைவேற்றலாக ஒரே சிந்தையாய் ஆணும் பெண்ணும் சகோதரத்துவ பாசத்தில் இணைந்த ஒரு அற்புதமான தெய்வீக அமைப்பு என்பதை நீங்கள் காணமுடியும்.

## பிரிவினை சபைகள் வளர்ந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

இன்றைய மதப்பிரிவினைகள் வேர்விட்டு வளரத் தொடங்கிய காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் **பெரும் வீழ்ச்சியின் காலம் அல்லது இருண்டகாலம்** என குறிப்பிடுகின்றார். புதிய ஏற்பாட்டு காலத்திலேயே, சபையைத் துண்டாட சிலர் முயன்றனர். இதை பவுல் வன்மையாகக் கண்டித்து உணர்த்தினார். (1 கொரி 1;10 - 17) அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், இதை கண்டித்துள்ளனர். கலாத்தியர் 1: 6-9 வசனங்களிலும், 2 பேதுரு 2:1ம் வசனத்திலும் எச்சரித்துள்ளனர். 2 தீமோத்தேயு 2:18ம் வசன இறுதியில், அப்போஸ்தலர் பவுல் மீண்டுமாக எச்சரிக்கிறார்.

" . . . . . இவர்கள் உண்மையைவிட்டு விலகி சிலருடைய விசுவாசத்தையே தகர்த்து விடுகிறார்கள். தொடர்ந்து 2 தீமோத்தேயு 4:3,4 வசனங்களில் கூறுகிறார். "ஒரு காலம் வரும் அப்போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்க மாட்டார்கள், மாறாக செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர் உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து, கட்டுக் கதைகளுக்கு செவி கொடுப்பர்". ( திருத்திய மொழி பெயர்ப்பு)

எபேசுவிலுள்ள புதிய ஏற்பாட்டுச் சபையை எச்சரித்து அப்போஸ்தலர் நடபடி 20;20-30 வசனங்களில் பவுல் கூறுகிறார் "நான் போன பின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி சீடர்களை தங்கள் பக்கத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்".

மாறுபாடான போதனைகளும், வீழ்ச்சியும் பவுல் கூறியவாறு கி.பி.100 முதல் 300 வரையிலான காலகட்டத்தில் தோன்றி, புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை சிறிது சிறிதாக மங்கச் செய்துவிட்டன. மாறுபாடான போதனைகள் தந்திரமாக ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்தப்பட்டு வந்தன.

1. புதிய ஏற்பாட்டுக்கால எளிய சுதந்திரமான, சபை நிர்வாகமுறை கொஞ்சம் கொஞ்சமாக பிஷப், ஆர்ச்பிஷப் என்றும்

கடைசியாக 7வது நூற்றாண்டு துவக்கமுதல்"போப்" என்று மனிதனால் உருவாக்கிய பதவிகளால் மாற்றப்பட்டு இறுதியில் பறித்துக் கொள்ளப்பட்டன.

2. மனிதனுடைய பாரம்பரியங்கள், தேவனின் வார்த்தைக்கு மேலாக மதிக்கப்பட்டு, மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டன.

3. புதிய ஏற்பாட்டு சபையின் எளிய வழிபாட்டு முறைகள் மாற்றப் பட்டு, மனிதன் ஏற்படுத்திய சடங்குகளுடன் இலத்தீன் மொழியில் பூசை (MASS), என்ற பெயரில் விக்கிரகங்களை வணங்குதல், ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகள் போன்றவைகள் இடம் பெற்றன.

4. ஜென்ம பாவம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் என்ற புதுமுறை புகுத்தப்பட்டு தண்ணீரைத் தெளித்து சபை அங்கத்தினர்களாக்கும் முறையில் தவறான மாற்றம் செய்யப்பட்டது.

5. போதர்கள் தங்களை "சங்கைக்குரிய" "அதி சங்கைக்குரிய" என்றெல்லாம் அடைமொழிகளை சேர்த்து பெருமையுடன் அழைத்துக் கொண்டதுடன், சபை அங்கத்தினர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக்காட்டும் ஆடைகளையும் அணிந்து கொண்டனர்.

படிப்படியாக நடைபெற்றுவந்த இந்த மாபெரும் வீழ்ச்சியை ஆண்டுவாரியாகக் கீழே காணலாம்.

**கி.பி. 150-ல் தலைமை பிஷப் தோன்றினார்!**
**கி.பி. 251-ல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் அறிமுகம்;**
**கி.பி.404-ல் விக்கிர வழிபாடு புகுத்தப்பட்டது;**
**கி.பி.607-ல் முதல் போப் உருவாக்கப்பட்டார்.**

அதாவது, ரோமன் கத்தோலிக்க மதம் தோன்றியது, அவர்கள் முதலாம் நூற்றாண்டில் மரித்த, இராயப்பர் என கத்தோலிக்கர்களால் அழைக்கப்படும் பேதுருவை முதலாவது போப் என சொல்வது எவ்வளவு பெரிய சரித்திர மோசடி என்பதைக் காணலாம். 'போப்' திருமணம் செய்து கொள்வது கூடாது என்று போதிக்கும் இவர்கள், திருமணமாகி குடும்பம் நடத்திய பேதுருவை "முதலாவது போப்" என்று கூறிக் கொள்வது எப்படி? (மத் 8:14, மாற்கு 1-30 லூக் 4:38; 1 கொரி 9:5)

கி.பி. 666-ல் ஆராதனையில் வாத்தியக் கருவிகளை அறிமுகம் செய்தனர்;

6. கி.பி. 800-ல் சபையும் (அதாவது கத்தோலிக்க சபையும்) அரசும் இணைந்து வேதத்துக்குப் புறம்பாக செயல்பட்டன மதத்தின் பெயரால் இவர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியையும் செய்த பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தி, புதிய ஏற்பாட்டு நடைமுறைகளுக்குத் திருப்பும் அவசியம் பற்றி மக்கள் மன்றத்தில் தைரியமாக எடுத்துரைத்த பலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

7. கி.பி. 1054-ல் கிரீக். ரோமன் சபைகள் என்று கத்தோலிக் மார்க்கத்தார்களிடையே பிளவு ஏற்பட்டு பிரிந்தனர்.

அடுத்து வந்த நூற்றாண்டுகளில் மேலும் பிரிவுகள் ஏற்பட்டு மாறுபாடான வழிபாட்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்து, உலக காரியங்களும் ஊழல்களும் மலிந்த மத அமைப்புகள் தோன்றலாயின.

16-ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன கேடுகளைக் களைந்தெறிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கு மீண்டும் செல்ல **ஜான்வைகுளிப், ஜான்ஹஸ்,** ஜெரோம் போன்றோர் கிளர்ந்தெழுந்தனர், மதமும் அரசும் இணைந்து வலிமை மிக்க சக்தியாக இயங்கிய அந்த கால கட்டத்தில் சபையின் ஒழுங்குகளிலிருந்து பிரிந்து எங்கோ வந்துவிட்ட நாம், மீண்டுமாக திரும்பிச் செல்லுவோம்'' எனக் குரல் எழுப்பி அறைகூவல் விட்ட, மேற்சொன்ன கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர்கள், அந்தோ, தங்கள் உயிரையே இழக்கவேண்டி வந்தது.!

பிற்காலத்தில் தோன்றிய மார்டின்லூதர். ''மதத்தலைவர்களின் தடைகள் இன்றி, எல்லோரும் பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, அதன்வழி நடக்கவேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக மாறுபாடான மனிதக் கோட்பாடுகளால் அமுங்கிக் கிடந்த புதிய ஏற்பாட்டுச் சபைக்கு, மீண்டுமாக உயிர்கொடுக்க ஒரு இயக்கம் தோன்றிற்று. இவ்வியக்கத்தில் **உல்ரிச்ஸ்விங்லி, ஜான்கால்வின் ஜான்நாக்ஸ்** போன்றோர் தீவிரப் பங்கேற்றனர். இவர்களுக்குப் பின் தோன்றிய **ஜான்வெஸ்லி** மனிதர்கள் கடைபிடித்து வந்த உயிரற்ற சடங்குகளை மாற்றி, புதிய ஏற்பாட்டு சபைக்கு உயிரூட்ட முயன்றார்.

இவர்கள் எல்லோருமே மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள். நாம் இவர்களுக்கு மிகவும் கடன்பட்டுள்ளோம். இருண்டகாலத்தில் ஒளியேற்ற பாடுபட்ட இவர்களை நாம் வாழ்த்துகிறோம்! ஆனால் பரிபரிதாபம்! காலத்தின் கட்டாயத்தாலும் சூழ்நிலையாலும் இதற்கு மேல் இவர்களால் செல்ல முடியவில்லை. காலப்போக்கில் மீண்டும் புதிய புதிய மனித சபை பிரிவுகள் உருவாக இந்த நல்ல மனிதர்களின் பெயர்களே பயன்படுத்தப்பட்டன என்பதுதான் வேதனையைத் தருகிறது. இவர்களில் எவருமே புதிய பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் இயங்கவில்லை. பிரிவினை சபைக்கு உதவும் எண்ணமும் இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் துரதிஷ்டமாக இவர்க

ளுடைய மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறதாக நினைத்துக் கொண்டு இவர்களுடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு விட்டு, மேலே குறிப்பிட்ட மனிதர்களை பின்பற்றலாயினர். இப்படியாக புதுப் புது பிரிவு சபைகள் தோன்றலாயின. **மார்ட்டின்லூதரைப்** பின்பற்றியவர்கள் **லூதரன் சபை** என்றும் கால்வின் கருத்துகளால் கவரப்பட்டவர் **பாப்டிஸ்ட் சபை** என்றும் ஜான் நாக்ஸ் வழியாக **பிரஸ் பிடேரியன் சபையும், ஜான் வெஸ்லியின்** ஆதரவாளர்கள் **மெதடிஸ்த் சபை,** எனவும் இங்கிலாந்து நாட்டில், இவ்வியக்கம் ஆங்கில சபை என்றும் பல பிரிவுகளாக உருவாயின.

காலம் செல்லச் செல்ல இப்பிரிவுகளில் உட்பிரிவுகள் பல முளைத்து அவைகளிலும் பிளவுகள் ஏற்பட்டு, இன்றைய தினம் அமெரிக்காவில் மட்டும் 1200 பிரிவுகள் உள்ளன. இந்தியாவிலும், உலகமெங்கிலும் எண்ணிலடங்கா பிரிவு (அல்லது பிளவு) சபைகள் உள்ளன. இவ்வாறாக ஆதிசபையை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஸ்தம்பித்துப் போனது மட்டுமில்லாமல் கிறிஸ்தவம் பல கூறுகளாக சிதைந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் முரண்பாடாகச் செயல்பட ஆரம்பித்தன.

மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபை பிரிவுகளுக்கிடையே வெடித்த பொறாமை, வெறுப்பு, அடிதடி, சட்டப் பிரச்சினைகளின் விளைவாகத் தோன்றிய ஏமாற்றத்தின் உச்ச கட்டத்தில், கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று.

சபை பிரிவுகளை ஒழித்துக் கட்டும் மார்க்கம், என்பது மீண்டும் ஒரு **புதிய பிரிவை ஏற்படுத்துவது அல்ல என்றும்** மாறாக மனிதரால் உருவாக்கப்பட்டு, சபைகள் என்ற பெயரில் இயங்கும் அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்புவது தான் ஒரே சரியான வழி என இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டு, **முதலாம் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபையின் சகல மகிமைகளையும் பூரணமான பரிசுத்தத்தையும் மீண்டும் கொண்டு வரப் பாடுபட்டனர்.**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அதாவது, **கிறிஸ்துவின் சபையை** மீண்டும் ஏற்படுத்தும் பணியில், பல பிரிவு சபைகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் பிரிவுகளை உதறிவிட்டு, உற்சாகமாகப் பங்கேற்றனர்.

வட கரோலினாவில் **மெதடிஸ்ட் சபையின்** புகழ் பெற்ற ஊழியராய் இருந்த **ஜேம்ஸ் ஓ கெல்லி** என்பவர், 1793-ல் சபையை உதறி தள்ளவிட்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைக் கொண்டுவர உழைத்தார். இவருடைய முயற்சியால் 5000 பேருக்கும் அதிகமான சகோதரர்கள் தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கவும் **புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களை மட்டுமே** தங்கள் சபையில் சட்ட திட்டமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

1801-ம் ஆண்டு துவக்கத்தில், புதிய இங்கிலாந்தில் **எலியாஸ்மித், அப்னார் ஜோன்ஸ்** என்ற இரு பாப்டிஸ்ட் போதகர்கள் தங்கள் பிரிவினை சபையை உதறிவிட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்காக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கென்டுக்கி மாநிலத்தில், **பர்ட்டன் ஸ்டோன்** என்ற **பிரஸ்பிட்டேரியன் போதகர்,** அதே சபையைச் சார்ந்த மற்றும் சில போதகர்களுடன் இணைந்து ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன் சபையை விட்டு வெளியேறி, "வேதாகமத்தைத் தவிர வேறு மனித சட்ட திட்டங்களோ, அல்லது கிறிஸ்தவன் என்ற பெயரைத் தவிர வேறு எந்த பெயருமோ நமக்குக் கூடாது" என அறிவித்து, புதிய ஏற்பாட்டு சபையை மீண்டும் கொண்டு வரும் பணியில் தங்களை அர்ப்பணித்தார்கள்.

ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன் சபையின் **கடைசி உயில்** என அவர்கள் வெளியிட்ட ஒரு பிரபலமான தஸ்தாவேஜு அறிவிப்பதைக் கேளுங்கள்.

"இந்த சபை (ஸ்பிரிங்பீல்டு பிரஸ் பிட்டேரியன்) மடிந்துபோகவும் கலைக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையிலே இணையவும் நாங்கள் தீர்மானிக்கிறோம். ஏனென்றால், நாம் ஒரே நம்பிக்கையில் அழைக்கப்பட்டிருப்பது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும்தான் உண்டு. மோட்சம் செல்ல தங்களின் ஒரே மார்க்கமாக மக்கள் இனி கிறிஸ்துவின் நற்செய்தியை (பைபிளை) மட்டுமே ஏற்றுக்கொள்ள நாங்கள் தீர்மானிக்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்திக்குப் போட்டியாக முளைத்த இதர எல்லா மனித சட்ட திட்டங்களையும், விரும்பினால், தீயிலிட்டு கொளுத்துவோம். மனிதன் இயற்றிய பலமதச் சடங்குகள், சட்ட புத்தகங்கள் வழியாக நரகத்திற்கு செல்வதை விட்டு, ஒரே வேதாகமத்தை மட்டும் நமது இரட்சிப்புக்கு ஏற்றுக் கொள்வோம்".

**இவ்வெழுச்சி காரணமாக விரைவிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் மனித சபை பிரிவுகளை உதறிவிட்டு பார்ட்டன்ஸ்டோன் அவர்களைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.**

மறுமலர்ச்சி இயக்கத்தில் வெகுமுக்கியமான நபர்கள்**தாமஸ் கேம்பல், அலெக்சாண்டர்கேம்பல்** ஆகிய இருவர். இவர்கள் தகப்பனும் மகனும் ஆவர். அயர்லாந்து நாட்டிலிருந்து இவர்கள் 1807, 1809ம் ஆண்டுகளில் குடிபெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்தனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப்பகுதி மிகப் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அதாவது "**பைபிள் எதைப்பேசுகிறதோ அதை மட்டுமே பேசுவோம்வ அது பேசாத எதையும் நாம் பேச மாட்டோம்**".

பிரஸ்பிட்டேரியன் சபை, பின்னர் பாப்டிஸ்ட் சபைகளில் அங்கம் வகித்த இவ்விருவரும், சத்தியத்தை தேடி உணர்ந்தபின், மேற்சொன்ன சபைப்பிரிவுகளை உதறிதள்ளிவிட்டு கிறிஸ்துவின் ஒரே சபையாகிய புதிய ஏற்பாட்டு சபையில் தங்களை இணைத்துக் கொண்டனர். பல்லா

யிரக்கணக்கான மக்கள் இவர்களைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சபையில் இணைய இவர்கள் காரணமாக இருந்தனர்.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், பல இடங்களிலும் தோன்றிய இந்த மறுமலர்ச்சிஇயக்கம் 1832-ம் ஆண்டு துவக்கத்தில் ஒருங்கிணைந்து, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்பும் இயக்கமாக செயல்பட்டது.

1. "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்" என 1பேதுரு 4:11ம் வசனத்தில் கூறியபடி, கிறிஸ்துவில் நம்பிக்கையுடைய எல்லோரின் ஒற்றுமையை வலியுறுத்தினர்.

2. வேதாகமத்தை மட்டுமே சபையின் சட்ட புத்தகமாக வைத்துக் கொண்டு, மனிதன் உருவாக்கிய சகல சபை சட்ட திட்டங்களையும் புறக்கணித்தனர்.

3. வேதாகமத்தில் குறிப்பிட்ட பெயர்களை மட்டுமே சபைக்கு உபயோகித்து, உண்மை கிறிஸ்தவர்களாக செயல்பட உறுதி பூண்டனர்.

4. புதிய ஏற்பாட்டு சபையில் நடைமுறையிலிருந்த வழிபாட்டு முறைக்குத் திரும்பினர்.

புதிய ஏற்பாட்டு சபையில் தொடர்ந்து ஒழுங்கு இருந்ததை ஏற்றுக் கொண்டு, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனுக்கு திரும்புவதில் கவனத்தையும், ஒழுங்கையும் கடைபிடித்தனர்.

**முன்னேற ஒரே வழி, பின்னே செல்வதுதான்**; அதாவது ஆதி சபையைப்போல இருப்பதுதான் என அவர்கள் நம்பினார்கள்.

இன்று நாம் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். வேதாகமத்தை மட்டுமே மூலமாக **எடுத்துக் கொண்டு**, சிதறிக் கிடக்கும் பிரிவினைக் கூட்டங்கள் தங்கள் **கொள்கைகளை** விட்டு, ஒன்றுபட வேண்டுகிறோம். மத பிரிவி**னைகளை** நோக்கி எங்கள் மன்றாட்டு இதோ: தயவு செய்து உங்கள் **நிலையை மறுபரிசீலனை** செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை பழக்க வழக்**கங்களை** மாற்றி வேதாகமம் பேசும் இடத்தில் பேசுங்கள்; அது பேசாததை நீங்களும் பேசாதீர்கள். . . அலெக்சாண்டர் காம்பெல் அல்லது பார்ட்டன் ஸ்டோன் அல்லது **ஜான்வெஸ்லி**, மார்ட்டின் லூதர் அல்லது **கால்வின்** அல்லது எந்த மனிதனையாவது பின்பற்றுங்கள் என நாங்கள் சொல்லவில்லை. மாறாக, உங்களை வேண்டுவதெல்லாம்; கிறிஸ்துவிடம் திரும்புங்கள்! அவருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள்! புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்துவின் சபைக்குத்

திரும்புங்கள்! நமது பழக்கங்களிலும், நம்பிக்கையிலும் நாம் பிரிவினை சபையாக இருக்கக்கூடாது என்பதே எங்கள் ஜெபம்!

இது ஒன்று மட்டும்தான் மத உலகில் ஒற்றுமைக்கான வழி. அன்று இது சாத்தியமாயிற்று; அப்படியானால் இன்றும் அது சாத்தியமே.

கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எல்லோரும் ஆதிச் சபைகள் முதலாம் நூற்றாண்டில் நடந்ததைப் போல, கிறிஸ்துவின் வழியில் நடக்கவேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கையும் ஜெபமுமாகும்.

முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ அதேபோல 20-ம் நூற்றாண்டிலும் நாம் இருக்கமுடியும். அவர்கள் நம்பியதை நாம் நம்பினால் அவர்கள் கீழ்ப்படிந்ததைப் போல நாமும் கீழ்ப்படிந்தால், அவர்கள், நடந்ததைப் போல நாமும் நடந்தால், கிறிஸ்துவின் சபையிலே நாம் அங்கம் வகிப்போம்.

நாம் முன்னேறபின்னோக்கிச் செல்வோம் . . ஆம்! முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையை நோக்கிச் செல்வோம்.

இயேசு கிறிஸ்து கட்டிய சபை:- **கிறிஸ்துவின் சபை,** அதன் உறுப்பினர்கள், **கிறிஸ்தவர்கள்.** கிறிஸ்தவர்களின் ஒரே முழுமையான சட்டநூல், எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமான சட்ட நூல் - புதிய ஏற்பாடு

*ராபர்ட் ஜி. டாக்கரி.* **எஸ்.எஸ்.ராஜன்.**

**"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.**

**மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சியத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்."**

**அப். 17 : 30, 31**

# "யெரொபெயாம்"

யெரொபெயாம் நேபாத்தின் குமாரன் சாலமோன் ராஜாவாக இருந்த காலத்தில், அவனுக்கு ஊழியம் செய்தவன் சாலமோன் கடைசி நாட்களில் செய்த தவறான அரசாட்சியை இவன் தனக்கு சாதகமாக பயன்படுத்தி கலகத்தை தூண்டினான். இது இராஜாவுக்குத் தெரியவர எகிப்துக்கு ஓடிப் போகிறான். சாலமோனின் மரணம் வரை அங்கிருந்துவிட்டு, மரணத்திற்குப் பின் நாடு திரும்பி, சாமர்த்தியமாக ஜனங்களைத் தன்வசப்படுத்தி, ஒன்றுபட்டிருந்த இராஜ்யத்தின் பெரும்பகுதியாகிய இஸ்ரவேலுக்கு ராஜாவாகிறான். இவனைக் குறித்து வேதாகமம் ". . . . . . . . இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணினவன்" என்று சொல்கிறது. ( 1 ராஜா 22:51) இந்த வாசகம் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் சொல்லப் பட்டிருக்கிறது." . . . . . . அப்பொழுது யெரொபெயாம் இஸ்ரவேலைக் கர்த்தரை விட்டுப்பின் வாங்கவும், பெரிய பாவத்தைச் செய்யவும் பண்ணினான்" என்றும் சொல்கிறது. (2 இராஜா 17:21)

இவனுடைய வாழ்க்கையிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகளும், அவருக்கு ஊழியம் செய்கிறவர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் உண்டு.

சாலமோன் ராஜாவின் மரணத்திற்குப் பின் அவருடைய குமாரனாகிய "ரெகொபெயாம்" அந்த ஸ்தானத்தில் மன்னராக்கப்பட்டான். ஆனால் பத்து கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் கலகம் செய்து, 'யெரொபெயாமை' தங்களுக்கு இராஜாவாக்கினார்கள். யூதா கோத்திரம், பென்யமீன் கோத்திரம் மற்றும் ஆசாரியக் கோத்திரமான லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தாவீதின் குடும்பத்திற்கு ஆதரவாய் நின்றார்கள். இராஜ்யபாரத்தை இளம் வயதில் ஏற்றுக்கொண்ட 'யெரொபெயாம்' தேவனுடைய தெய்வீக மாதிரியின்படி ஆராதனை செய்ய தொடர்ந்து எருசலேமுக்குச் செல்ல ஜனங்களை அனுமதித்தால், அவர்கள் யூதாவின் இராஜாவாகிய "ரெகொபெயாமால்" கவர்ந்து கொள்ளப் படுவார்களோ என்று பயந்தான்.

ஆகவே, அவன் தானே ஒரு மார்க்கத்தை உண்டு பண்ணி, தான் தெரிந்து கொண்ட ஆசாரியர்களைக் கொண்டு நிர்வகித்து வந்தான். இரண்டு பொன் கன்றுக் குட்டிகளைச் செய்து வழிபாட்டு ஸ்தலத்தில் ஆராதனைக்காக வைத்தான். அவைகளின் ஒன்றை வடக்கிலுள்ள 'தாணிலும்' மற்றொன்றை தெற்கிலுள்ள பெத்தேலிலும் வைத்தான். 'கன்று' உருவச் சிலைகளை நிறுவின இரண்டு இடங்களிலும் கோயில்கள் இரண்டைக் கட்டினான். யூதாவில் ஆசரிக்கப்படும், கூடாரப் பண்டிகைக்கு ஒப்பாய், 8ம் மாதம் 15ம் தேதி ஒரு பண்டிகையை உண்டு பண்ணினான். (1 ராஜா 12 : 32) ஆசாரியராய் இருக்கும்படி

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்தைச் சேராத, ஜனங்களில் ஈனமானவர்களைத் தெரிந்து கொண்டு, அவர்களை அக்கோயில்களுக்கு ஆசாரியராக்கினான். (1 இராஜா 12 : 31) "தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட எட்டாம் மாதம் 15ம் தேதியிலே, பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின் மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின் மேல் பலியிட்டுத் தூபங்காட்டினான். (1 இராஜா 12 : 33) அவனுடைய ஆராதனைகள் முறைகள் அனைத்தும் அவன் தன்னுடைய மனதில், விருப்பம் போல் நியமித்துக் கொண்டவைகள். அவைகள், தேவன் கொடுத்த உண்மையான ஆராதனையைப் போல் தோற்றமளிக்கும் "போலியான ஆராதனை முறைகள்".

யெரொபெயாம் தன்னுடைய ஜனங்களைப் பார்த்து, "...... நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே இதோ இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொன்னான்" (1இராஜா 12 : 28) அவன் ஜனங்களுக்கு சொல்ல விரும்பியது இதுதான். பழைய ஆராதனை முறையை, புதிய வடிவத்திலே நான் உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் அதை தாராளமாய்ப் பின்பற்றுங்கள். அதில் தவறேதுமில்லை என்பது தான். அதாவது இந்தப் பொன் கன்றுக்குட்டிகள் தான் தேவர்கள். இந்தத் தேவர்கள் உங்கள் வீடுகளில் அருகாமையில் உள்ளது. இந்த தெய்வங்களை நீங்கள் நெருங்குவது சுலபம். ஆகவே நீங்கள் எருசலேமுக்குப் போகாமல் இங்கிருந்தே ஆராதிக்கலாம் என்றான். ஆனால் பிதாவாகிய தேவன் அது "பாவம்" என்று சொல்கிறார். அது மாத்திரமல்ல, இவனைக் குறித்து வேதாகமம், இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணினவன் என்று சொல்கிறது.

## இவன் செய்தவைகளைப் பாருங்கள்

1. யெரொபெயாம் தேவன் தெரிந்து கொள்ளாத இடங்களை ஆராதனைக்காகத் தெரிந்து கொண்டான் (1 இராஜ 11 : 36) தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட இடம் எருசலேம் தான் (உபா 12: 11,14) அங்கு தான் தேவாலயம் இருந்தது. பலிபீடம் இருந்தது. ஆசாரியர்கள் இருந்தார்கள், இஸ்ரவேலர் அனைவரும் அங்கு பலிசெலுத்தி, பண்டிகைகளை அங்கு கொண்டாட வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆனால் யெரொபெயாம் ஜனங்களை எருசலேமுக்குப் போகவிடாமல் செய்தான்.

2. யெரொபெயாம், ஆராதனைக்குண்டானவைகளைத் தானே தெரிந்து கொண்டான். விக்கிரகங்களை உண்டு பண்ணினதால், பத்துக்கட்டளைகளில் இரண்டாம் கட்டளையை மீறினான். (யாத் 20:4) இவன் உண்டு பண்ணின பொன் கன்றுக்

குட்டிகளை தேவன், பாராமுகமாய் இருப்பார் என நினைத்திருப்பானா?

3. யெரொபெயாம், ஆராதனைக்குண்டான நேரங்களை தானே தெரிந்து கொண்டான். எருசலேமின் பண்டிகைகளுக்கொப்பான பண்டிகைகளைத் தெரிந்து கொண்டான். இவைகளெல்லாம், ஜனங்களில் சௌகரியத்திற்காகத்தான் என்றும் சொன்னான். தேவனுடைய சித்தத்திற்கு ஏன் கீழ்ப்படியக் கூடாது என்பதற்கு காரணங்களைச் சொல்லாத சமயவாதி யாராவது உண்டா?

4. யெரொபெயாம், தனக்கென ஒரு ஆராதனை முறையைத் தெரிந்து கொண்டான். லேவி கோத்திர ஆசாரிய முறைக்கும் பதிலாக புதிய ஆசாரிய முறையை துவக்கினான். எப்பொழுதுமே, ஒரு தவறு, பல தவறுகளுக்கு வழி வகுக்கும். லேவியின் மக்களை ஆசாரிய ஊழியம் செய்யும்படி தேவன் நியமித்திருந்தார். (எண். 3:10) ஆனால், யெரொபெயாம் ஜனங்களில் ஈனமானவர்களை ஆசாரியர்களாக்கினான்.

தேவனின், உண்மையான மார்க்கம், மனிதனால் கொண்டு வரப்பட்ட சடங்குகளை அடிப்படையாக வைத்து மாற்றப் பட்டது. தன்னால் கொண்டு வரப்பட்ட பொய்யான மார்க்கத்திற்கு ஜனங்கள் யெரொபெயாமால் கவரப் பட்டார்கள். இது தேசத்தில் பிளவை உண்டு பண்ணியது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப் படியாமை எப்பொழுதும் பிரிவினையை உண்டு பண்ணியது. பத்து கோத்திரத்தார் யெரொபெயாமுடன் போனார்கள்.

யெரொபெயாமின், 22 வருட அரசாட்சிக்குப் பின் வந்த இராஜாக்கள் அவனுடைய கொள்கையைப் பின்பற்றினார்கள். அசீரியர், இஸ்ரவேலை மேற்கொள்ளும் வரை விக்கிரகாராதனை என்ற தேவ விரோத பாவம், எல்லா ஜனங்களிடமும் பேதமின்றி பரவி இருந்தது.

"முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோம 15:4) இன்றைக்கு, தேவன் அவருடைய வார்த்தையின் படியாகத்தான் ஆராதிக்கப்பட வேண்டும் (மத் 15:9, யோவா.4:29, 2 யோவா 9-11). ஜனங்களை தவறாக வழிநடத்தும் ஊழியர்கள், நியாயத் தீர்ப்பின் நாளில் மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கும். (மத் 15:14, 18:6, யாக். 3:1

ஆகையால், யெரொபெயாமின் பாவம் நிறைந்த வாழ்க்கையிலிருந்து ஒரு முக்கியமான பாடத்தை நாம் கற்றுக் கொள்வது அவசியம். "வேதவாக்கியங்களில் எழுதியுள்ளபடி, தேவன் ஆராதிக்கப்பட வேண்டும்". நிச்சயமாக நம்முடைய சௌகரியத்திற்கு கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

- EZSR

# அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை

நமது தினசரி அலுவல்களில் கிறிஸ்தவத்துக்கு உரிய பங்கைக் கொடுத்தால் மட்டுமே நமது கிறிஸ்தவ வாழ்க்கை அர்த்தமுள்ளதாக விளங்கமுடியும் "வாரத்துக்கு ஒருமுறை" அல்லது "மாதத்திற்கு ஒரு முறை" என்ற கருத்து புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்துக்கு ஏற்புடையதல்ல. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்திலே ஒவ்வொரு நாளும் மன்னாவை சேகரித்தது போல, கிறிஸ்தவனும் தினமும் ஆவிக்குரிய ஆகாரத்தைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். (யாத் 16:4)

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்" என இயேசு கூறினார். (லூக்கா 9:23) கிறிஸ்துவுக்காக வாழும் ஒவ்வொரு நாளும் நமக்குப் புதுப்புது சவால்களை விடுகிறது என்றாலும், நாம் எடுக்கும் சகல முடிவுகளிலும் தேவனை முன்னிருத்தி செயல்பட வேண்டுமென்ற தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். (மத் 6 : 33)

கிறிஸ்துவின் சிலுவையை சுமந்து கொண்டு செல்வதென்றால், கழுத்தில் ஒரு சிறு சிலுவையை தொங்க விட்டுக் கொண்டு அலைவதல்ல. கிறிஸ்துவைப் போல தன்னை வெறுத்து, பிறருக்காக ஜீவனையும் கொடுத்த கிறிஸ்துவின் சீரிய முன்னுதாரணத்தைப் பின்பற்றி நாம் வாழ வேண்டுமென்பதே பொருளாகும்.

இவ்வாறாக தினமும் நடந்து வந்தால், நமக்கும், நமது முன் மாதிரியான வாழ்க்கையால் கவரப்பட்டவர்களுக்கும் கிறிஸ்தவம் அர்த்தமுடையதாக விளங்கும்.

இயேசுவுக்காக வாழ நாம் முயற்சிக்கையில் மற்றுமோர் முக்கியமான காரியத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தினமும் வேத வசனங்களைப் படித்து இயேசுவைப் போல நடந்து கொண்டால் நமது வழியில் தோன்றும் தடங்கல்கள் யாவற்றையும் தகர்த்தெரியத் தேவைப்படும் பலத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். முயல்வோம்.

**எஸ்.எஸ்.ராஜன்.** **கிளன் எலியம்.**

## திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை
## திங்களிதழ் விதிப்படிவம் IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கேயம் - 638 701 |
| அச்சிடுவோர் பெயரும்,<br>முகவரியும் | : | ஜீவசக்தி பிரஸ்<br>148-B, கிருஷ்ணம் பாளையம்<br>ஈரோடு - 638 003 |
| வெளியிடுவோர் பெயர் | : | கிறிஸ்துவின் சபை,<br>காங்கயம். |
| இந்திய குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கயம் - 638 701 |
| ஆசிரியர் பெயர் | : | S. ராஜநாயகம் |
| இந்தியக் குடிமகளா ? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கயம் - 638 701 |
| இதழுக்குரியவர்<br>பெயரும், முகவரியும் | : | கிறிஸ்துவின் சபை,<br>தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701 |
| இந்தியக் குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கயம் - 638 701 |

S. ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் கம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

காங்கயம் (ஒப்பம்)

மார்ச், 1994. S. ராஜநாயகம்

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001
Tuesdays - 2:00 to 2:15 P.M.
Thursdays - 2:15 to 2:30 P.M.
Fridays- 2:15 to 2:30 P.M.

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, March, 1994
MARCH 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER    BOOK POST

To

If undelivered Please return to
The Editor
**THIRUMARAI AASAAN**
POST BOX No. 27, KANGAYAM - 638 701